<u>2026 பிப்ரவரி மாதம் 19– ஆம் தேதி வியாழக்கிழமை</u>

<u>கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி</u>

<u>எம் .சி .ஓ .பி. நெம்பர் : 26/2022</u>

MCOP No.: 26/2022 – நாகராஜ் PW1 19.02.2026

த/பெ.சங்கர்

<u>சாட்சி அழைக்கப்பட்டு, 3 ம் எதிர்மனுதார் தரப்பில் குறுக்கு விசாரணை :–</u>

1. 2ம் மனுதாரர் முனீஸ்வரனுக்கு திருமணமாகி தனியாக வாழ்ந்து வருகிறார் என்றால் சரிதான், எனக்கு திருமணமாகவில்லை. எனது தந்தை ஆண்டிபட்டி வருவாய் அலுவலகத்தில் தற்காலிக பணியாளராக பணிபுரிந்து மாதம் ரூ.25,000/– சம்பளம் பெற்று வந்தார் என்பதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை. காவல்நிலையத்தில் விபத்து சம்பந்தமாக புகார் யார் கொடுத்தார்கள் என்றால் நான் தான் கொடுத்தேன். நான் விபத்தை பார்க்காதப்போது விபத்து குறித்து யார் சொல்லி காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் எனது நண்பர்கள் காளிதாஸ் மற்றும் மகேஷ்வரன் ஆகியோர்கள் விபத்தை நேரில் பார்த்து எனக்கு தகவல் சொன்னார்கள்.

2. விபத்து சம்பந்தமான வழக்கில் மகேஷ்வரனையும், காளிதாசையும் போலீசார் விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். நான் தாக்கல் செய்துள்ள மனுவிலோ, நிரூபண வாக்குமூலத்திலோ, புகாரிலோ, எனது நண்பர்கள் காளிதாஸ் மற்றும் மகேஷ்வரன் ஆகியோர் விபத்தை பார்த்து எனக்கு தகவல் சொன்னதாக நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். விபத்து நடந்த நேரம் என்ன இருக்கும் சம்பவ நாளன்று இரவு 9.00 முதல் 9.15 மணியளவில் விபத்து நடந்தது. விபத்து நடந்த சாலை தேனி–மதுரை பிராதான சாலை என்றால் சரிதான். அந்த சாலை கிழமேல்

சாலை என்றால் சரிதான். எனது தந்தை சாலையின் தெற்குப்பக்கம் சென்றாரா அல்லது வடக்குப்பக்கம் சென்றாரா என்றால் வடக்குப்பக்கம் சென்றுவிட்டு, கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி சென்றார்.

3. எனது தந்தை விபத்து சமயத்தில் எதிரே உள்ள ஹோட்டலில் டிபன் வாங்கிக்கொண்டு சாலையை கடந்தப்போது விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். எனது தந்தையை இடித்ததாக சொல்லப்படும் இருச்சக்கர வாகனம் எனது தந்தை திசை நோக்கி வந்ததா அல்லது எனது தந்தை வந்த திசைக்கு எதிர்திசையிலிருந்து வந்ததா என்றால் எனது தந்தை திசை நோக்கி வந்தது. விபத்து கிழமேல் சாலையின் மையப்பகுதியில் நடைபெற்றது என்றால் சரியல்ல, வடக்கே சாலையின் ஓரமாக மரத்தை ஒட்டி நடைபெற்றது. நான் சொல்வதுபோல் விபத்து நடந்திருந்தால் இருச்சக்கர வாகனத்தை ஓட்டிய ஓட்டுநர் சாலைவிதிகளை கடைப்பிடித்து வடக்குப்பக்கம் சென்றாரா என்றால் தெற்குப்பக்கம் சென்றார். ஸ்கூட்டியின் ஓட்டுநர் சாலை விதிகளை கடைப்பிடித்து இடதுப்பக்கமாக ஓட்டிவந்தார் என்றால் அவர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் வாகனத்தை ஓட்டிவந்தார்.

4. இருச்சக்கர வாகன ஓட்டுநருக்கு விபத்து சமயத்தில் ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரிதான். விபத்து சமயம் இரவு நேரம் என்பதாலும், எனது தந்தைக்கு கண்பார்வை குறைவாக இருந்ததால் சாலையை சரியாக கவனிக்காமல் சாலையை கடக்கும்போது விபத்து ஏற்பட்டுவிட்டது என்றால் சரியல்ல. எனது தந்தை இறக்கும்போது எனது தந்தைக்கு வயது என்ன இருக்கும் என்றால் 62 வயது இருக்கும். நான் பல்வேறு தலைப்புகளின் கீழ் கோரியுள்ள இழப்பீட்டுத்தொகை அதிகம்

என்றால் சரியல்ல. விபத்து பாலிசி விதிமீறலில் நடந்துள்ளதாலும், எனது தந்தையின் கவனக்குறைவு தான் விபத்திற்கு காரணம் என்பதாலும், 3ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. நான் இழப்பீட்டுத் தொகை 1, 2 எதிர்மனுதாரர்களிடம் தான் கோர முடியும் என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை**</u> – இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 19.02.2026 அன்று வியாழக்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
19.02.2026